# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8069091

1. District : சேலம் PS: ஊழல்தடுப்பு Year: 2024 FIR No.: 03/AC/24 Date: 20.06.2024
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: u/s 7(a)
(ii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 10.06.2024 at 16.00 hrs
Date to : நாள் வரை 14.06.2024 at 17.30 hrs
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல்
Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.06.2024
Time : நேரம்

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக
எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
சுமார் 2 கி.மீ தெற்கு
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி
ஊரக வளர்ச்சி துறை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சேலம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ந. செந்தில்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் இளங்கோ
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 35/24
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில்
(g) Address : முகவரி
வடக்கு தெரு, வரகூர் அஞ்சல், தென்னம்பட்டி வட்டம், சேலம் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திரு ராமசந்திரன் உதவி செயற்பொறியாளர், ஊரக வளர்ச்சி துறை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சேலம்
2) திரு சாமுவேல் இளநிலை வரைவாளர், ஊரக வளர்ச்சி துறை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சேலம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
தாமதமில்லை

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

20/6/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

21/6/24
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

20.06.2024 at 15.30 h

Name: பெயர் N.K. Ravichandran
Rank: நிலை ........... No. எண் ........
VAO
Salem.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

<u>சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 3/AC/2024 u/s 7(a) of Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.</u>

இன்று 20.06.2024 ஆம் தேதி பகல் 14.05 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்திலிருந்தபோது கு.செந்தில், த/பெ குள்ளுதம்பி, வடக்குகாடு, வரகூர் அஞ்சல், தலைவாசல் வட்டம், சேலம் மாவட்டம் என்பவர் அலுவலகம் வந்து கொடுத்த தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விவரம் பின்வருமாறு. அனுப்புநர், கு.செந்தில், த/பெ குள்ளுதம்பி, வடக்குகாடு, வரகூர் அஞ்சல், தலைவாசல் வட்டம், சேலம் மாவட்டம். பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்சஒழிப்புத்துறை, சேலம். ஐயா, நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறையில் கருப்பாயி காண்ட்ராக்டர்ஸ் என்ற பெயரில் ஒப்பந்ததாரராக பணிகள் செய்து வருகிறேன். அதன் பதிவு எண் 13/2012–13 ஆகும். என்னுடன் என்னுடைய அப்பா குள்ளுதம்பி அவர்களும், நாவக்குறிச்சியை சேர்ந்த பாலகிருஷ்ணன் என்பவரும் உதவியாக இருந்து வருகிறார்கள். 29.11.2021 ஆம் தேதியன்று முதலமைச்சரின் கிராமசாலைகள் மேம்பாட்டு திட்டத்தில் சாலைபணிகளுக்கு ஆன்லைனில் நடைபெற்ற டெண்டரில் கலந்துகொண்டு தலைவாசல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 1). நாவக்குறிச்சி பஞ்சாயத்தில் ரூ.84 லட்சம் மதிப்பில் ராஜாக்கோயில் முதல் குப்பத்தாயி ராஜ் காடு வரையிலான 1.6 கி.மீ நீள தார் சாலை அமைத்தல், 2) சிறுவாச்சூர் பஞ்சாயத்தில் ரூ.48 லட்சம் மதிப்பில் சாலையம்மன் நகர் முதல் ரங்கநாதபுரம் வரையிலான 1 கி.மீ நீள தார் சாலை அமைத்தல், 3) வரகூர் பஞ்சாயத்தில் ரூ.47 லட்சம் மதிப்பில் வரகூர் முதல் முருகன் கோயில் ரோடு வரையிலான 0.800 கி.மீ நீள தார் சாலை அமைத்தல், 4) மணிவிழுந்தான் பஞ்சாயத்தில் ரூ.65 லட்சம் மதிப்பில் மணிவிழுந்தான் தெற்கு முதல் மணிவிழுந்தான் தெற்குபுதூர் வரையிலான 1.5 கி.மீ நீள சாலை அமைத்தல் மற்றும் 5) தலைவாசல் பஞ்சாயத்தில் ரூ.58.40 லட்சம் மதிப்பில் கோவிந்தம்பாளையம் ரோடு முதல் பலாமரத்துகாடு வரையிலான 1.380 கி.மீ நீள தார் சாலை அமைத்தல் ஆகிய பணிகள் எனக்கு வழுங்கப்பட்டிருந்தது. அதில் 1). நாவக்குறிச்சி பஞ்சாயத்திற்குட்பட்ட ராஜாக்கோயில் முதல் குப்பத்தாயி ராஜ் காடு வரையிலான சாலை அமைத்தல், 2) சிறுவாச்சூர் பஞ்சாயத்திற்குட்பட்ட சாலையம்மன்நகர் முதல் ரங்கநாதபுரம் வரையிலான சாலை அமைத்தல், 3) வரகூர் பஞ்சாயதிற்குட்பட்ட வரகூர் முதல் முருகன் கோயில் ரோடு வரையிலான சாலை அமைத்தல், ஆகிய பணிகள் ஏற்கனவே முடிக்கப்பட்டு அதற்கான பகுதி பில்தொகை மட்டுமே எனக்கு வழங்கப்பட்டது. மீதம் ரூ.3.5 லட்சம் வழங்கப்படாமல் உள்ளது. அப்போது, சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி துறையில் உதவி

செயற்பொறியாளர் திரு.ரவிச்சந்திரன் அவர்கள் செயற்பொறியாளர் பணியினை கூடுதலாக கவனித்து வந்தார். மீதமுள்ள இரண்டு பணிகளுக்கு பில்தொகை வழங்கப்படாமலிருந்தது. எனவே, 10.06.2024 ந்தேதி மாலை சுமார் 4 மணியளவில் நானும், எனது அப்பாவும், பாலகிருஷ்ணனும் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள ஊரகவளர்ச்சித் துறை அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்த JDO திரு.சாகுல் அவர்களை சந்தித்து, பில்தொகை வரவேண்டிய 1) மணிவிழுந்தான் பஞ்சாயத்திற்குட்பட்ட ரூ.65 லட்சம் மதிப்பிலான மணிவிழுந்தான் தெற்குமுதல் மணிவிழுந்தான் தெற்குபுதூர் வரையிலான 1.5 கி.மீ நீள தார்சாலை அமைத்தல் மற்றும் 2) தலைவாசல் பஞ்சாயத்திற்குட்பட்ட ரூ.58.40 லட்சம் மதிப்பிலான கோவிந்தம்பாளையம் ரோடு முதல் பலாமரத்துகாடு வரையிலான 1.380 கி.மீ நீள தார்சாலை அமைத்தல் ஆகிய இரண்டு பணிகளுக்கான பில் தொகை பற்றி கேட்டோம். அதற்கு JDO திரு.சாகுல் அவர்கள், ' பில் தொகை வராத இரண்டு பணிகளுக்கும் சேர்த்து மொத்தம் ரூ.1,23,40,000/– ல் 18% GST மற்றும் பராமரிப்பு தொகை ரூ.10.40 லட்சம் போக மீதி தொகை ரூ.90,78,800/– க்கு 1% தொகையான ரூ.91ஆயிரத்தை செயற்பொறியாளருக்கு கொடுத்தால்தான் அந்த இரண்டு பணிகளுக்கும் பில் போட்டு தொகை வழங்க ஏற்பாடு செய்யமுடியும் என்றும், அவ்வாறு பணம் கொடுக்கவில்லை என்றால், கண்டிப்பாக அந்த பில் தொகை உங்களுக்கு கிடைக்காது என்றும் மேலும் தன்னை தனியாக கவனிக்கவேண்டும் என்றும் சொன்னார். நாங்கள் வேறு வழியின்றி அப்போது என்னிடமிருந்த ரூ.50 ஆயிரத்தை JDO திரு.சாகுல் அவர்களிடம் கொடுத்தேன். அதைப் பெற்றுக்கொண்டு, மீதி தொகையை கொடுத்தால்தான் தன்னால் பில் போட்டு செயற்பொறியாளரிடம் கையெழுத்து வாங்கி தொகை வழங்க ஏற்பாடு செய்யமுடியும் என்று சொன்னார். மேலும், இந்த 2 பணிகளுக்கு பில் தொகை வழங்குவது தொடர்பாக செயற்பொறியாளர் திரு.சேகர் அவர்களை பார்த்துவிட்டு போகும்படியும், ஏற்கனவே வேலை முடித்து பகுதி தொகை வழங்கப்பட்ட மூன்று பணிகள் சம்மந்தமாக உதவி செயற்பொறியாளர் திரு.ரவிச்சந்திரன் அவர்களை பார்த்துவிட்டு போகும்படியும் சொன்னார். அதன்படி, நாங்கள் மூனுபேரும் உடனடியாக அந்த அலுவலகத்தில் இருந்த உதவி செயற்பொறியாளர் திரு.ரவிச்சந்திரன் அவர்களை பார்த்தோம். அப்போது அவர், ஏற்கனவே முடிக்கப்பட்டு பகுதி தொகை வழங்கப்பட்ட அந்த மூன்று பணிகளுக்கான பில்லில் தான்தான் கையொப்பமிட்டு பில்தொகை பாஸ் செய்ததாகவும், ஆனால் இதுவரை நீங்கள் என்னை கவனிக்கவில்லை என்றும், அதற்காக ரூ.40 ஆயிரம் தனக்கு தனியாக தரவேண்டும் என்றும் சொன்னார். இல்லையென்றால்

மேற்கொண்டு இந்ததுறையில் ஒப்பந்த பணிகள் கிடைக்காதவாறு செய்துவிடுவேன் என்றும் சொன்னார். அதற்கு நாங்கள், தற்போது எங்களிடம் பணம் ஏதும் இல்லை என்று கூறியதற்கு முதலில் ரூ.20,000/– கொடுக்குமாறும் பின்னர் மீதி பணத்தை கொடுக்குமாறும் கூறினார். அதற்கு நாங்கள் பிறகு வருவதாகவும் சொல்லிவிட்டு வந்துவிட்டோம். அதன் பின்னர் செயற்பொறியாளர் திரு. சேகர் அவர்களை நாங்கள் சென்று பார்த்து பில் தொடர்பாக கேட்டதற்கு அவர் பில் போட்டு என்னிடம் வந்தால் நான் கையொப்பம் செய்து அனுப்பிவிடுவதாக தெரிவித்தார். அதன் பிறகு, 14.06.2024 அன்று மாலை சுமார் 5.30 மணியளவில் மீண்டும் நானும், எனது அப்பாவும், பாலகிருஷ்ணனும் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள ஊரக வளர்ச்சித் துறை அலுவலகத்திற்கு சென்று, JDO திரு.சாகுல் அவர்களை சந்தித்து, பில்தொகை பற்றி கேட்டோம். அதற்கு அவர் தான் கேட்ட செயற்பொறியாளருக்கு கொடுக்க வேண்டிய பணம் ரூபாய் 41,000/– த்தை கொடுத்தால்தான் பில்போட்டு தொகை வழங்க ஏற்பாடு செய்ய முடியும் என்று கண்டிப்பாக சொல்லிவிட்டார். மேலும் தங்களுக்கு டெண்டர் வேலை இருப்பதால் அந்த தொகையை வரும் வியாழக்கிழமை கொண்டு வந்து கொடுக்குமாறு கூறினார். அதனால் நாங்கள் திரும்பி வந்துவிட்டோம். உதவி செயற்பொறியாளர் திரு.ரவிச்சந்திரன் மற்றும் JDO திரு.சாகுல் ஆகியோருக்கு லஞ்சமாக பணம் கொடுத்து நான் செய்துமுடித்த பணிகளுக்கு பில் தொகை பெற எனக்கு விருப்பமில்லை. எனவே, JDO திரு.சாகுல் அவர்கள் சொன்னவாறு ரூபாய் 41,000/–த்துடன் JDO திரு.சாகுல் அவர்களையும், உதவி செயற்பொறியாளர் திரு.ரவிச்சந்திரன் அவர்கள் கேட்ட ரூபாய் 40,000/–ல் அவர் கூறியவாறு முன்பணமாக ரூபாய் 20,000/–த்துடனும் இன்று திரு. பாலகிருஷ்ணன் உடன் சென்று சந்திக்க முடிவு செய்துள்ளேன். எனவே, அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Signed K. Senthil.

Sir, Received the above typed complaint on 20.06.2024 at 14.05 hrs, the genuineness of the informant was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be not good. Hence, I registered a case in Salem Vigilance and Anti Corruption Cr. No. 03/AC/2024 u/s 7(a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 20.06.2024 at 14.45 hrs and took up for

investigation. Sd xxxx (N.K.RAVICHANDRAN) 20.06.2024, Inspector of Police, V & AC, Salem.

Original FIR along with original typed complaint of Tr. K. Senthil, S/o Kulluthambi is submitted to the Hon'ble Special Judge, Special court for Trail of cases under Prevention of Corruption Act, Salem and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

20/06/2024

(N.K.RAVICHANDRAN)
INSPECTOR OF POLICE,
V&AC, SALEM.